பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**10 04 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மொரீஷியஸ் உடனான நல்லுறவு வலுவடைந்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

2. எரிசக்தி துறையில் இந்தியாவும் - பூடானும் ஒத்துழைப்பை அதிகரிக்க அதிக வாய்ப்புகள் உள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

3. வாகன தொழில்துறையில் அடுத்த 7 ஆண்டுகளில் உலகிலேயே முன்னணி நாடாக இந்தியாவை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

4. போர்நிறுத்தத்தை ஈரான் முறையாக கடைபிடிக்கவில்லை என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா 3 தங்கப் பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மொரீஷியஸ் உடனான நல்லுறவு வலுவடைந்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக மொரீஷியஸ் சென்றுள்ள அவர், அந்நாட்டுப் பிரதமர் திரு. **Naveen Ramgoolam**-ஐ நேற்று சந்தித்துப் பேசினார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில், கடல்சார் ஒத்துழைப்பு, கல்வி, சுகாதாரம், திறன் மேம்பாடு உள்ளிட்டவற்றில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது குறித்து மொரீஷியஸ் பிரதமருடன் ஆலோசனை நடத்தியதாக கூறியுள்ளார்.

முன்னதாக மொரீஷியஸ் வெளியுறவு அமைச்சர் திரு. தனஞ்செய் ரித்தீஷ் உடனும் டாக்டர் ஜெய்சங்கர் பேச்சு நடத்தினார்.

<<<<>>>>

எரிசக்தி துறையில் இந்தியாவும் - பூடானும் ஒத்துழைப்பை அதிகரிக்க அதிக வாய்ப்புகள் உள்ளதாக மத்திய மின்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக பூடான் சென்றுள்ள அவர், நேற்று அந்நாட்டு மன்னர் திரு. Jigme Kesar Namgial-ஐ நேற்று சந்தித்துப் பேசினார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு மன்னருடன் திரு. மனோகர்லால் ஆலோசனை மேற்கொண்டார்.

முன்னதாக பூடான் பிரதமர் திரு. Shering Tobgay மற்றும் அந்நாட்டு எரிசக்தி துறை அமைச்சர் திரு. Lyonpo Gem-ஐயும் அமைச்சர் சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்புகளின்போது நீர்மின் திட்டங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் ஆகியவற்றில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

அப்போது நீர்மின் திட்டம் மற்றும் மின்பரிமாற்றம் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே 2 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

<<<<>>>>

வாகன தொழில்துறையில் அடுத்த 7 ஆண்டுகளில் உலகிலேயே முன்னணி நாடாக இந்தியாவை மாற்ற நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சாலைப்போக்குவரத்து துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் வாகன தொழில்துறை தொடர்பான மாநாட்டில் நேற்று பேசிய அவர், வாகன தொழில்துறையில் ஆராய்ச்சி, நவீன தொழில்நுட்பம், புதுமை ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டில் நாட்டின் வாகன தொழில்துறையின் மதிப்பு 7 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது என்றும், தற்போது அது 22 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது வாகன தொழில்துறையில் இந்தியா உலகிலேயே 3வது இடத்தில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் இத்துறை சார்ந்து நான்கரை கோடி வேலைவாய்ப்புகள் உள்ளதாக அவர் கூறினார்.

வாகன தொழில்துறையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களுக்கு ஏற்ப சாலைக் கட்டமைப்புகளும் மேம்படுத்தப்பட்டு வருவதாக திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<>>>>

உலக ஹோமியோபதி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

ஹோமியோபதி மருத்துவத்தின் தந்தை என்றழைக்கப்படும் டாக்டர் சாமுவேல் ஹானிமனின் பிறந்த தினம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 10ஆம் தேதி உலக ஹோமியோபதி தினமாக கொண்டாடப்படுகிறது.

"நிலையான ஆரோக்கியத்திற்கு ஹோமியோபதி" என்ற கருப்பொருளில் இந்த ஆண்டு ஹோமியோபதி தினம் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் ஹோமியோபதி தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கை மத்திய ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தொடங்கி வைக்கிறார்.

இதில் நாடு முழுவதிலும் இருந்து ஹோமியோபதி மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்க உள்ளதாக மத்திய ஆயுஷ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட சில தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 92 செகண்ட்ஸ்)

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் இளையோர் மேம்பாட்டுக்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ரஞ்சிக் கோப்பையை வென்ற ஜம்மு-கஷ்மீர் அணி புதுதில்லியில் நேற்று அவரை சந்தித்தது.

அப்போது பேசிய குடியரசு துணைத்தலைவர், கடந்த சில ஆண்டுகளில் ஜம்மு-கஷ்மீரில் மகளிர் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றார்.

மத்திய அரசின் இளைஞர் பரிமாற்றத் திட்டம் ஜம்மு-கஷ்மீர் இளையோரை தேசிய உணர்வுடன் இணைத்துள்ளதாக அவர் கூறினார்.

குடிமைப் பணித் தேர்வுகள் மற்றும் ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம். நுழைவுத் தேர்வுகளில் ஜம்மு-கஷ்மீரைச் சேர்ந்த மாணவர்கள் தற்போது அதிக

அளவில் பங்கேற்று தேர்ச்சி அடைந்து வருவதாகவும், இது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில் கலந்துகொண்ட மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், கடந்த 12 ஆண்டுகளில் ஜம்மு-கஷ்மீர் அனைத்து துறைகளிலும் வளர்ச்சியை எட்டியுள்ளதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில் இளம் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு முக்கியமானது என்று மக்களைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

கோவாவில் நடைபெற்ற காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் மேற்கு மண்டல மாநாட்டில் பேசிய அவர் ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்தவும், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மக்கள் பிரதிநிதிகள் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நல்லாட்சியையும், சிறந்த நிர்வாகத்தையும் வழங்குவதில் மாநில சட்டமன்றங்களுக்கு இடையே ஆரோக்கியமான போட்டி நிலவ வேண்டும் என்று அவர் கூறினார்.

உறுப்பினர்கள் அவை விதிகளை முறையாக அறிந்துகொண்டு செயலாற்ற வேண்டும் என்று திரு. ஓம் பிர்லா கேட்டுக்கொண்டார்.

இந்த மாநாட்டில் மகாராஷ்டிரா, கோவா மற்றும் குஜராத்தை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் பங்கேற்றனர்.

<<<<>>>>

மியான்மரில் புதிய அதிபராக திரு. **Min Aung Hlaing** இன்று பதவியேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில் இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் பங்கேற்க உள்ளார்.

இதனிடையே நான்கு நாள் பயணமாக மியான்மர் சென்றுள்ள திரு. கீர்த்தி வர்தன் சிங் முன்னிலையில் நேற்று கல்வித்துறை மேம்பாடு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.

இரு நாடுகளுக்கும் இடையே கல்வி, வர்த்தகம், பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அந்நாட்டு அதிகாரிகளுடன் அமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

மியான்மரின் வளர்ச்சிக்கு இந்தியா தொடர்ந்து உதவிகளை வழங்கும் என்று திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

போர்நிறுத்தத்தை ஈரான் முறையாக கடைபிடிக்கவில்லை என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஹோர்முஸ் நீரிணை வழியாக கப்பல்களை அனுமதிப்பது தொடர்பாக ஈரான் முறையாக செயல்படவில்லை என்று கூறியுள்ளார்.

எண்ணெய்க் கப்பகல்களை அனுமதிக்க ஈரான் கட்டணம் வசூலிப்பதாகவும், இது மோசமான நடவடிக்கை என்றும் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா **3** தங்கப் பதக்கங்களை வென்றது.

சிம்லாவில் நடைபெற்ற இப்போட்டியில் **19** வயதுக்குட்டோருக்கான மகளிர் பிரிவு, **15** வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவில் இந்தியா தங்கம் வென்றது.

இதில் மகளிர் மற்றும் இரட்டையர் பிரிவு போட்டிகள் இன்று நடைபெறுகிறது.

**<<<<The End>>>>**